பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
சென்னை –28.

<u>சுற்றறிக்கை எண்.03/2023</u>

<u>கடித எண். 36330/U1/2023 நாள்.29.09.2023.</u>

பொருள்: புகார்கள்– நில அபகரிப்பு புகார்கள்–போலி ஆவணங்கள்– பதிவுச்சட்டப்பிரிவு 77(A)ன் கீழான மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை – குறித்து.

பார்வை:
1. இவ்வலுவலக சுற்றறிக்கை எண்.33760/யு1/2022 நாள்.27.09.2022.
2. இவ்வலுவலக சுற்றறிக்கை எண்.45633/யு1/2022 நாள்.04.01.2023.
3. W.P. (MD) No:14546/2022 மற்றும் Batch cases நாள்.27.03.2023
4. W.P. N0: 28728/2018 நாள்.
5. W.P. N0: 18814/2023 நாள்.27.06.2023
6. Additional Advocate General Opinion 65/2023 நாள். 26/09/2023.

*****

பொருள் தொடர்பாக தமிழ்நாடு திருத்தச்சட்டம் 41/2022 அமுல்படுத்தப்பட்டு, அதனை கையாளும் வழிமுறைகள் தொடர்பாக பார்வை 1ல் காணும் இவ்வலுவலக கடித வழி அனைத்து மாவட்டப்பதிவாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

தற்போது பார்வை 3ல் காணும் வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய ஆணையில் கீழ்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளது.

i. *whether the recitals in a document presented for registration, can be examined and determine that such document was fraudulently executed or registered;*
ii. *whether a document in which the recitals alone are questioned can be considered only as voidable which would normally necessitate the filing of the suit to set aside the particular document or whether even those documents can be cancelled by the Sub Registrar under Section 77A of the Registration Act;*
iii. *whether exercise of power under Section 77A must be restricted to registration of documents in contravention to Section 22-A or 22-B of the Registration Act, 1908 alone?*
iv. *whether the exercise of such power under Section 77A of the Registration Act can be prospective in nature or retrospective in nature?*

மேற்படி வினாக்களை பரிசீலித்திட *Larger Bench*க்கு நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது என்றும், மேற்படி *Larger Bench*ன் முடிவு வரும் வரை

Verified by RealEstate™

சார்பதிவாளர்கள் எவ்வித நடவடிக்கையும் தொடர வேண்டாம் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதே போல் பார்வை (5)–ல் காணும் சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதிபதி தனது ஆணையில் கீழ்கண்டவாறு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

"........... *In view of the above order, this Court once again reiterates that the District Registrars across Tamil Nadu shall not take any further action on the application submitted under Section 77A of the Registration Act, till a final decision is rendered by the Larger Bench"*, என ஆணை பிறப்பித்துள்ளார்.

மேற்காண் நீதிமன்ற ஆணைகளின் மீது இத்துறை மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞரின் கருத்து கோரப்பட்டதில் பார்வை (6)–ல் காணும் கருத்தில், பதிவுச்சட்டப்பிரிவு 77Aன் கீழ் பெறப்படும் புகார் மனுக்கள் மீது, மாநிலம் முழுவதும் உள்ள மாவட்டப்பதிவாளர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என கருத்து தெரிவித்துள்ளார்.

எனவே பதிவுச்சட்டப்பிரிவு 77Aன் கீழ் விசாரணை அலுவலர்களாக உள்ள மாவட்டப்பதிவாளர்(நிர்வாகம்) *Larger Bench*ன் முடிவு வரும் வரை எவ்வித விசாரணையும் மேற்கொள்ளக்கூடாது என அறிவுறுத்தப்படுகிறது. இந்த அறிவுரை 16.08.2022க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட ஆவணப்பதிவுகள் மற்றும் பின்னர் பதிவு செய்யப்பட்ட பதிவுகளுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–29.09.2023
பதிவுத்துறை தலைவர்
//ஆணைப்படி//

பதிவுத்துறை தலைவருக்காக

**பெறுநர்:**

1. அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
3. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்,

**நகல்**

1. "CS" பிரிவு
   பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
   (பதிவுத்துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட)
2. 'அ' பிரிவு, பதிவுத்துறை தலைவர் அலுவலகம்.
3. உதிரி.

Verified RealEstate™